SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்
அக்டோபர் - 2018

# TNPSC ZERO CURRENT AFFAIRS MAINS

0% Effort | 100% Results

www.tnpscthervupettagam.com
tnpscfeedback@shankarias.in

Available @Bookmark Store.

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040
**Contact : 044-43533445 | 044-45543082.**
**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy | Coimbatore | Namakkal.

# OCTOBER – 2018

## IMPORTANT TOPICS

1) **World Agriculture Prize**
உலக வேளாண்மை பரிசு

2) **Allahabad – renamed**
அலகாபாத் பெயர் மாற்றம்

3) **Angriya**
அங்க்ரியா

4) **Vigilance Awareness Week**
லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரம்

5) **Gir National Park**
கிர் தேசிய பூங்கா

6) **Gita Gopinath**
கீதா கோபிநாத்

7) **Vayoshreshtha Samman-2018**
வயோஷ்ரேஷ்த சம்மன் - 2018

8) **#Self4Society app**
**#Self4Society** செயலி

9) **Nobel Peace prize and Seoul peace prize 2018**
நோபல் பரிசு மற்றும் சியோல் அமைதி பரிசு 2018

10) **Benami Transactions (Prohibition) Amendment Act**
பினாமி பரிவர்த்தனை (தடை) திருத்தச் சட்டம்

11) **Astana Declaration**
அஸ்தானா பிரகடனம்

12) **SAHYOG HOP TAC-2018**
**SAHYOG HOP TAC-2018**

13) **Sittwe Port and Chabahar Port**
சிட்வே மற்றும் சாபஹார் துறைமுகம்

14) **Zika virus**
ஸீகா வைரஸ்

15) **Future Policy Gold Award**
எதிர்கால கொள்கைக்கான தங்க விருது

16) **Global Skills Park**
உலகத் திறன் பூங்கா

17) **Atal Innovation Mission**
அடல் புத்தாக்கத் திட்டம்

18) **Digi Yatra**
டிஜி யாத்ரா திட்டம்

19) **Nobel Prize 2018 for Physiology**
மருத்துவத்துறையில் நோபல் பரிசு (2018)

20) **SATAT**
**SATAT**

21) **Pradhan Mantri Bhartiya Janaushadhi Pariyojana**
பிரதம மந்திரி பாரதிய ஜன் அவுஷாதி பரியோஜனா திட்டம்

22) **Stephen Hawking**
ஸ்டீபன் ஹாக்கிங்

23) **Summer Youth Olympics 2018**
2018 கோடை கால ஒலிம்பிக் போட்டி

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

24) **National Consumer Disputes Redressal Commission**
தேசிய நுகர்வோர் குறை தீர்ப்பு ஆணையம்

25) **Bitcoin**
பிட்காயின்

26) **Indian Ocean Rim Association**
இந்தியப் பெருங்கடல் ரிம் கூட்டமைப்பு

27) **Pradhan Mantri Fasal Bima Yojana**
பிரதம மந்திரியின் வேளாண் காப்பீட்டு திட்டம்

28) **GI tag**
புவி சார் குறியீடு

29) **Strategic Policy Group**
யுக்திசார் கொள்கை குழு

30) **National Real Estate Development Council**
தேசிய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு கழகம்

31) **Migingo Island**
மிகிங்கோ தீவு

32) **Lokayan 18**
லோகயான் 18

33) **Sabki Yojana Sabka Vikas campaign**
சப்கி யோஜனா சப்கா விகாஸ்

34) **Microplastics**
மைக்ரோபிளாஸ்டிக்

35) **Pradhan Mantri Sahaj Bijli Har Ghar Yojana**
பிரதான் மந்திரி சஹஜ் பிஜ்லி ஹர்கர் யோஜனா திட்டம்

36) **UDYAM ABHILASHA**
உத்யம் அபிலாஷா திட்டம்

37) **Sovereign blue bond**
சவரின் நீலப் பத்திரம்

38) **Electoral bonds**
தேர்தல் நிதிப்பத்திரங்கள்

39) **WHO Guidelines on Sanitation and Health**
துப்புரவு மற்றும் சுகாதாரம் மீதான WHO வழிகாட்டுதல்கள்

40) **Basic Criteria to disqualify an MP or MLA**
நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர்களை தகுதி நீக்கம் செய்யத் தேவையான அடிப்படை நெறிமுறைகள்

41) **Procedure of renaming of the state**
மாநிலத்தின் பெயரை மாற்றுவதற்கான அரசியலமைப்பு நடைமுறைகள்

42) **Competition Commission of India**
இந்திய போட்டி ஒழுங்குமுறை ஆணையம்

43) **River Basin Management**
மாநில நதிநீர் படுகை மேலாண்மை

44) **bisphenol A (BPA)**
பிஸ்பினால் - A

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

45) **Rashtriya Mahila Kisan Diwas**
ராஷ்டிரிய மஹிளா கிஷான் திவாஸ்

46) **Challenges faced by women in Agriculture**
வேளாண்மையில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

47) **IMPRESS Scheme**
**IMPRESS** திட்டம்

48) **Rashtriya Vayoshri Yojana**
ராஷ்டிரிய வயோஸ்ரீ யோஜனா

49) **POCSO Act**
**POCSO** சட்டம்

50) **National Policy on Electronics 2018 draft**
மின்னணு சாதனங்கள் மீதான தேசிய கொள்கை - 2018 வரைவு

51) **Tamil Nadu Forest Policy 2018**
தமிழ்நாடு வனக் கொள்கை 2018

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

# அக்டோபர் - 2018

## *மூன்று மதிப்பெண் வினாக்கள்*

**1. 2018 ஆம் ஆண்டின் உலக வேளாண்மை பரிசு பெற்றவர் யார்? அவரின் பங்களிப்பு என்ன?**

(i) Dr.M.S. சுவாமிநாதன் - முதல் உலக வேளாண்மை பரிசு பெற்றுள்ளார்.

(ii) பரிசளித்த நிறுவனம் - இந்திய உணவு மற்றும் வேளாண்மை கழகம்

(iii) பங்களிப்பு: மரபியல் துறையில் ஆராய்ச்சி, உணவு மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு, மற்றும் சைட்டோஜெனிடிக்ஸ், கதிர்வீச்சு மற்றும் வேதியற் ஜீன் பிளவு

(iv) சுவாமிநாதன் - இந்திய பசுமை புரட்சியின் தந்தை

(v) பொருளாதார சூழியலின் தந்தை

**2. 2018, அக்டோபர் மாதம், அலகாபாத் பெயர் மாற்றம் செய்யப்பட்டது பற்றி எழுதுக.**

(i) 2018, அக்டோபர் 16 அன்று அலகாபாத் 'பிரயாக்ராஜ்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

(ii) 1575-ல் பிரயாக், இலாகாபாத் என்றும் பின்னர் அலகாபாத் என்றும் மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

(iii) பிரயாக்ராஜ் கங்கை யமுனை ஆறுகளுக்கிடையே அமைந்துள்ளது. 3 பக்கமுது ஆறுகளால் சூழப்பட்டுள்ளது.

(iv) இங்குதான் புகழ்பெற்ற கும்பமேளா திருவிழாவானது 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்படுகிறது.

**3. அங்க்ரியா அண்மைச் செய்திகளில் ஏன் இடம் பெற்றது?**

(i) இந்தியாவின் முதல் உள்நாட்டு ஆடம்பரக் கப்பல்.

(ii) இது வாரந்தோறும் மும்பை - கோவாவிற்கு இடையே சுற்றுப்பயணம் செய்யும்.

(iii) மராட்டிய படையின் முதலாவது தளபதி கன்ஹோஜி அங்கிரியின் நினைவாக கப்பல் இப்பெயர் பெற்றது.

(iv) இது "இந்தியக் கடலின் சிவாஜி" என்று அறியப்படுகிறது.

(v) இதன் முதலாவது பயணம் 2018 அக்டோபர் 20 அன்று தொடங்கியது.

**4. லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் எப்போது கொண்டாடப்பட்டது? அதன் கருப்பொருள் என்ன?**

(i) இது மத்திய லஞ்ச ஒழிப்பு ஆணையத்தால் கடைபிடிக்கப்பட்டது.

(ii) 2018 அக்டோபர் 29 தொடங்கி 2018 நவம்பர் 3 வரை லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் கடைபிடிக்கப்பட்டது.

(iii) **நோக்கம்** : ஊழலுக்கு எதிராக அனைவரையும் பங்கு பெறச் செய்தல்.

(iv) மக்களிடையே லஞ்சத்தின் தீய விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

(v) **கருப்பொருள்** : லஞ்சத்தை ஒழிப்போம். புதிய இந்தியாவை கட்டமைப்போம்

**5. சமீபத்தில் கிர் தேசிய பூங்காவில் ஏற்பட்ட நோய் தொற்று பற்றி குறிப்பிடுக.**

(i) கானைன் டிஸ்டம்பர் வைரஸ் (Canine Distemper Virus) மற்றும் புரோட்டோசோவா நோய் தொற்றாகும்.

(ii) இது ஹர்பாட் நோய் (Harpad Disease) என்றும் அழைக்கப்படுகிறது.

(iii) பரமிக்சிவோரைடின் குடும்பத்தை சார்ந்த ஒற்றைச் சுருள் ஆர்.என்.ஏ வைரஸ் காரணமாக இந்நோய் ஏற்படுகிறது.

(iv) காற்றின் மூலம் எளிதில் பரவக் கூடியது.

(v) 23 சிங்கங்கள் இதனால் உயிரிழந்தன.

**6. கீதா கோபிநாத் என்பவர் யார்? அவர் ஏன் அண்மைச் செய்திகளில் இடம் பெற்றார்?**

(i) சமீபத்தில் பன்னாட்டு நிதியத்தின் முதன்மை பொருளாதார வல்லுநர் (Chief Economist of IMF) தேர்வு செய்யப்பட்டார்.

(ii) பன்னாட்டு நிதியத்தின் முதல் பெண் முதன்மை பொருளாதார வல்லுநர்

(iii) இரகுராம் ராஜனுக்கு அடுத்து இரண்டாவதாக இப்பதவிக்கு முறையாக தேர்வு செய்யப்பட்ட இந்தியர்.

**7. தமிழ்நாட்டிலிருந்து வயோஷ்ரேஷ்த சம்மன் - 2018 விருதினை பெற்றவர்கள் யார்?**

(i) மூத்த குடிமக்களுக்கான தேசிய விருது.

(ii) துணைக் குடியரசு தலைவர் வெங்கையா நாயுடு இவ்விருதினை வழங்கினார்.



SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

| Y.G. இராஜலட்சுமி பார்த்தசாரதி | மூத்த குடிமக்களுக்கான விருது |
|---|---|
| **மதுரை மாவட்ட பஞ்சாயத்து.**<br>**தமிழ்நாடு (மதுரை மாவட்ட ஆட்சியராகப் பணிபுரிந்த வீரராகவ ராவ் அவர்கள் இவ்விருதினைப் பெற்றுக் கொண்டார்.** | மூத்த குடிமக்களுக்கான சேவைகளை வழங்குவதில் சிறந்து விளங்கும் மாவட்ட பஞ்சாயத்து. |

**8. # Self 4 Society செயலி என்றால் என்ன?**

(i) My Gov - ஆல் வடிவமைக்கப்பட்டது.

(ii) தொழிற்பண்பட்டவர்கள் செய்யும் தன்னார்வ சேவையை ஒருங்கிணைப்பதற்கான முயற்சி

(iii) இந்த செயலியில் சன்மானங்கள், போட்டிகள், சமூக வலைதளம் ஆகியவைகளையும் கொண்டிருக்கின்றது.

**9. 2018ம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு மற்றும் சியோல் அமைதி பரிசு பெற்றவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?**

| அமைதிக்கான நோபல் பரிசு 2018 | சியோல் அமைதி பரிசு |
|---|---|
| i) **டேனியல் முக்வாஜி - காங்கோ குடியரசு.**<br>ii) **நாடியா முரட் - ஈராக்** | i) நரேந்திர மோடி - இந்திய பிரதமர் |

**10. பினாமி பரிவர்த்தனை (தடை) திருத்தச் சட்டம் பற்றி குறிப்பிடுக.**

(i) 2016 ஆண்டு இச்சட்டமானது இயற்றப்பட்டது.

(ii) கருப்பு பணத்தை ஒழிப்பது இதன் நோக்கம்

(iii) புதிய திருத்தம் - 7 ஆண்டு சிறை மற்றும் அபராதம்

(iv) பினாமி பெயரில் உள்ள சொத்துக்களை உரிமையாளர் திரும்ப பெற தடை செய்கிறது.

(v) பினாமி பெயரில் உள்ள சொத்துக்களை எந்த வித நஷ்ட ஈடும் வழங்காமல் கையகப்படுத்த அரசிற்கு அதிகாரம் வழங்குகிறது.

**11. அஸ்தானா பிரகடனம் என்றால் என்ன?**

(i) ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்துவதற்கான ஒரு உலகளாவிய முயற்சி.

(ii) இது 1978 ன் அல்மா-அட்டா பிரகடனத்தை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

(iii) கஜகஸ்தானில் உலக சுகாதார நிறுவனம் மற்றும் யுனிசெப் ஆகியவை இணைந்து நடத்திய உலக மாநாட்டில் இது மேற்கொள்ளப்பட்டது.

(iv) இந்தியா உட்பட ஐ.நா.அவையின் அனைத்து (192) நாடுகளும், இப்பிரகடனத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

## 12. SAHYOG HOP TAC - 2018 என்றால் என்ன?

(i) இந்தியா மற்றும் வியட்நாம் நாடுகளின் கடலோரக் காவல் படைகள் பங்குபெறும் முதலாவது கூட்டு போர்ப் பயிற்சி ஒத்திகை.

(ii) கடற்கொள்ளையை தடுப்பது மற்றும் கடல் சூழலைப் பாதுகாப்பது தொடர்பான பயிற்சி.

(iii) சென்னைக்கு அருகாமையில் வங்காள விரிகுடா கடலில் இப்பயிற்சி நடத்தப்பட்டது.

## 13. சிட்வே மற்றும் சாபஹார் துறைமுகம் பற்றி எழுதுக.

| சிட்வே துறைமுகம் | சாபஹார் துறைமுகம் |
|---|---|
| **இந்தியா - மியான்மர் இணைந்து கட்டமைக்கும் துறைமுகம்.** | இந்தியா, ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் இணைந்து இத்துறைமுகத்தை உருவாக்குகிறார்கள். |
| **மியான்மரின் ராக்கைன் மாகாணத்தில் அமைந்துள்ளது.** | **இடம்** : ஈரான், ஓமன் வளைகுடா |
| நோக்கம் : **கொல்கத்தாவிலிருந்து, மிசோராமிற்கு செல்வதற்கான நேரம் காலம் மற்றும் தொலைவினைக் குறைப்பது.** | **நோக்கம்** : பாகிஸ்தானின் நிலப்பரப்பைப் பயன்படுத்தாமல் ஆப்கானிஸ்தானை அடைவதற்கான புதிய வழித்தடத்தினை உருவாக்குதல். |

## 14. ஸீகா வைரஸ் சிறுகுறிப்பு வரைக?

(i) எடிஸ் எஜிப்தி கொசுக்களின் மூலம் பரவுகிறது.

(ii) கொசு கடிப்பதன் மூலம் அதிகளவில் பரவுகிறது.

(iii) அறிகுறிகள் - காய்ச்சல், தலைவலி, கண் சிவத்தல், தோல் அரிப்பு, தலை வலி.

(iv) சிகிச்சை : இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை

(v) தடுப்பு : கொசுக் கடியிலிருந்து பாதுகாத்து கொள்வது. சுற்றுப்புறத்தில் தண்ணீர் தேங்காமல் வைத்து கொள்வது.

**15. எதிர்கால கொள்கைக்கான தங்க விருது பெற்றவர் யார்? அதன் முக்கியத்துவம் என்ன?**

(i) இது உலக உணவு மற்றும் வேளாண்மைக் கழகத்தால் வழங்கப்படுகிறது.

(ii) சிக்கிம் மாநிலமானது இவ்விருதினைப் பெற்றுள்ளது.

(iii) சிக்கிம் : உலகின் முதலாவது முழு இயற்கை வேளாண்மை மாநிலம்

(iv) முக்கியத்துவம் : கொள்கைக்கு என வழங்கப்படும் உலகின் முதல் விருது. இதன் மூலம் சிறந்த வாழ்விட சூழலை ஏற்படுத்துவது ஊக்குவிக்கப்படுகிறது.

**16. உலகத் திறன் பூங்காவானது என்பது யாது?**

(i) உலகத் திறன் பூங்கா மத்தியத் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

(ii) ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

(iii) இது இந்தியாவின் முதல் பல்-திறன் பூங்காவாகும்.

(iv) இது அம்மாநிலத்தின் தொழில் நுட்ப கல்வியின் பயிற்சி தரத்தை மேம்படுத்துகிறது.

(v) நோக்கம் - திறன் பெற்ற பணியாளர்களை உருவாக்குவது.

**17. அடல் புத்தாக்கத் திட்டம் - வரையறு**

(i) புதுமையான கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவுக் கலாச்சாரத்தை ஊக்குவித்தல்.

(ii) புத்தாக்க ஒத்துழைப்பை பெருக்குவது.

(iii) கல்வி, அறிவியல் மற்றும் புத்தாக்கக் கண்டுபிடிப்பு சாதனைகளை ஊக்குவித்தல்.

(iv) சுய தொழில் மூலம் தொழில் முனைவை ஊக்குவிப்பது, திறமையை பயன்படுத்திக் கொள்வதன் மூலம் தொழில்முனைவில் வெற்றி பெற்றவர்கள் புதிதாக வருபவர்களுக்கு உதவி செய்வது, மற்றும் வழிகாட்டுவது.

(v) புதுமைகளை கண்டுபிடிக்க படைப்பாற்றலை பெருக்க சிறந்த மேடையை உருவாக்கித் தருவது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**18. டிஜி யாத்ரா திட்டம் பற்றி எழுதுக.**

(i) விமான நிலையங்களில் பயோமெட்ரிக் செயல்முறையை பின்பற்றுவது டிஜி யாத்ரா

(ii) நோக்கம் : காகிதமற்ற மற்றும் சிரமம் இல்லாத விமானப் பயணத்தை ஊக்குவிப்பது.

(iii) பயணச்சீட்டு பரிசோதனை, நுழைவு, பாதுகாப்பு ஆகியவற்றில் டிஜிட்டல் தொழில் நுட்பத்தை கையாளுவது.

(iv) மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்தின் திட்டம்.

**19. மருத்துவத்துறையில் நோபல் பரிசு (2018) பெற்றவர்களை குறிப்பிட்டு அவர்களின் பங்களிப்பை எழுதுக.**

(i) ஜேம்ஸ்.பி.அல்லிசன் (அமெரிக்கா)

(ii) டசுக்கு ஹோன்ஜோ (ஜப்பான்)

(iii) பங்களிப்பு : எதிர்மறை நோயெதிர்ப்பு மூலம் புற்றுநோய்க்கான புதிய சிகிச்சை முறை கண்டுபிடிப்பு.

**20. SATAT வரையறு.**

SATAT – Sustainable alternative towards affordable transportation.

(i) குறைந்த செலவிலான போக்குவரத்திற்கான நீடித்த மாற்று வசதிகள்.

(ii) வேளாண் கழிவுகள், நகராட்சி கழிவுகள் மற்றும் மாட்டு சாணம் ஆகியவற்றை கொண்டு மலிவு விலை மாற்று எரிபொருள் பயன்பாட்டை அதிகரிப்பது.

(iii) இது விவசாயிகள், நுகர்வோர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகிய மூவருக்கும் பயனளிக்கும்.

(iv) இத்திட்டத்தை பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகமானது தொடங்கியுள்ளது.

**21. பிரதம மந்திரி பாரதிய ஜன் அவுஷாதி பரியோஜனா திட்டம் பற்றி சிறு குறிப்பு வரைக.**

(i) மருந்துத்துறை இந்த திட்டத்தைத் தொடங்கியது.

(ii) தரமான மருந்துகள், குறைவான விலையில் கிடைக்கப் பெறச் செய்வது இதன் நோக்கமாகும்.

(iii) இத்திட்டத்தில் பிராண்டட் மருந்துகள் தரத்திற்கு நிகரான ஜெனரிக் மருந்துகள் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

(iv) அதிக விலை என்பது அதிக தரம் என்ற மக்களின் தவறான மனப்பான்மையை மாற்றுவது மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது இதன் மற்றொரு நோக்கமாகும்.

**22. ஸ்டீபன் ஹாக்கிங் பற்றி எழுதுக.**

(i) புகழ்பெற்ற இயற்பியல் வல்லுநர் மற்றும் நவீன அண்டவியல் ஆராய்ச்சியாளர்.

(ii) பார்கின்சன் நோயினால் பாதிக்கப்பட்டவர்.

**பங்களிப்புகள் :**

(i) ஹாக்கிங் கதிர்வீச்சு - கொள்கையளவில் கருந்துளைகளும் கதிர்வீச்சினை ஏற்படுத்தும் என்பதனை கணித்தார்.

(ii) ஒருங்கிணைந்த தளக் கோட்பாட்டிற்கு (Unified Field Theory) பதிலளித்துள்ளார். இது ஐன்ஸ்டினின் பதில்களில் கிடைக்காத பல கோட்பாடுகளுள் ஒன்று.

(iii) புத்தகங்கள் :

(A) Brief Answers to the Big Questions.

(B) My Brief History of time

**23.** 2018 **கோடை கால ஒலிம்பிக் போட்டிகளில் இந்திய கொடியை ஏந்தி சென்றவரின் பெயர், நோக்கம் (Motto) போட்டியின் சின்னம் ஆகியவற்றை எழுதுக.**

(i) நோக்கம் : எதிர்காலத்தை உணரு (Feel the Futre)

(ii) சின்னம் : பான்டி (சிறுத்தை)

(iii) கொடி ஏந்தி சென்றவர் : தொடக்க விழா : மனுபாக்கர்
நிறைவு விழா : ஜெரேமி லால் ரின்னுங்கா

**24. தேசிய நுகர்வோர் குறை தீர்ப்பு ஆணையத்தை** (NCDRC) **பற்றி எழுதுக.**

(i) நீதிச் சார்புடைய ஆணையம்

(ii) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986ன் கீழ் 1988-ஆம் ஆண்டு இந்த ஆணையமானது அமைக்கப்பட்டது.

(iii) ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி இதன் தலைவராக செயல்படுகிறார்.

(iv) தற்போதைய தலைவர் : நீதிபதி R.K.அகர்வால்

**25. பிட்காயின் என்றால் என்ன?**

(i) சமீபத்தில் பிரபலமான பல வகை மெய்நிகர் நாணயங்களில் (Cryptocurrency) பிட்காயினும் ஒன்று.

(ii) அடிப்படையில் இவை டிஜிட்டல் சொத்து; வணிகத்தில் இது ரூபாயைப் போன்று பரிமாற்று ஊடகமாகச் செயல்படுகிறது.

(iii) பொய்யான மற்றும் போலியான பணப் பரிவர்த்தனைகளை தடுக்க கிரிப்டோகிராபி தொழில்நுட்பத்தின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

(iv) இவை சாதாரண நாணயங்களில் இருந்து வேறுபட்டவை, ஏனெனில் இவற்றிற்கு இயற்பியல் வடிவம் கிடையாது. அதாவது இவற்றை தொட்டு உணர முடியாது.

(v) இவை திரையில் தெரியும் எளிமையான எண்களே ஆகும். இவற்றை கட்டுப்படுத்தவோ, நெறிப்படுத்தவோ மத்திய வங்கி என எதுவும் கிடையாது.

**26. இந்தியப் பெருங்கடல் ரிம் கூட்டமைப்பு பற்றி விவரி?**

(i) உறுப்பு நாடுகள்-21 பேச்சுவார்த்தை சார்ந்த உறுப்பு நாடுகள் - 7

(ii) நோக்கம் : இந்தியப் பெருங்கடல் பகுதியில் பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் நீடித்த மேம்பாட்டினை ஊக்குவிப்பது மற்றும் வலுப்படுத்துவது.

(iii) IORA - பிராந்திய கூட்டமைப்பு. இது பொதுவாக முத்தரப்பு கூட்டமைப்பு. ஏனெனில் இதில் அரசாங்கங்கள், முதலீட்டாளர்கள் / வியாபாரிகள் மற்றும் கல்வியாளர்கள் / வல்லுநர்கள் பங்கேற்கின்றனர்.

(iv) இது வெளிப்படையான பிராந்திய கொள்கையின் அடிப்படையில் பொருளாதார ஒத்துழைப்பை, குறிப்பாக வர்த்தக முதலீடுகள் மற்றும் பிராந்திய சமூக அபிவிருத்தி ஆகியவற்றை வலுப்படுத்துகிறது.

(v) உறுப்பு நாடுகள் : இந்தியா, ஆஸ்திரேலியா, இலங்கை, ஈரான், இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா தென் ஆப்ரிக்கா, மொசாம்பிக், கென்யா, தான்சானியா, வங்கதேசம், சிங்கப்பூர், மொரிஷியஸ், மடகாஸ்கர், ஐக்கிய அரபு அமீரகம், ஏமென், செஷல்ஸ், சோமாலியா, கோமரோஸ் மற்றும் ஓமன்.

**27. பிரதம மந்திரியின் வேளாண் காப்பீட்டு திட்டத்தின் குறிக்கோள்கள் யாவை?**

(i) எதிர்பாராமல் நிகழும் பயிர் இழப்பு/விளைச்சல் பாதிப்பு ஆகியவற்றில் விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்குவது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

(ii) விவசாயிகளின் வருமானத்தை நிலைப்படுத்துவது மற்றும் அவர்கள் தொடர்ந்து விவசாயம் செய்ய ஊக்குவிப்பது.

(iii) விவசாயத் துறைக்கு தேவையான கடனுதவி வழங்குவது, உணவுப் பாதுகாப்பு மற்றும் பயிர் பன்முகத் தன்மையை உறுதி செய்வது.

(iv) விவசாய உற்பத்தியை அதிகரிப்பது மற்றும் வேளாண் துறையை சிறந்த போட்டி துறையாகக் கொணர்வது மற்றும் ஆபத்துகளிலிருந்து விவசாயிகளை பாதுகாப்பது.

**28. புவி சார் குறியீடு (GI tag) என்றால் என்ன?**

(i) இது வேளாண்மை, இயற்கை மற்றும் உற்பத்தி (கைவினை மற்றும் தொழிற்சாலை பண்டங்கள்) ஆகியவற்றின் சிறப்பு தன்மையை குறிக்கும் குறியீடு

(ii) புவிசார் குறியீடு பெற அது ஒரு குறிப்பிட்ட பகுதியுடன் வரலாற்றுத் தொடர்பு கொண்டிருக்க வேண்டும்.

(iii) ஒரு குறிப்பிட்ட இடத்தில் தயாரிக்கப்பட்ட பண்டங்கள் அவ்விடத்தின் சிறப்பம்சங்களையும், தரத்தையும் கொண்டிருக்கும். எனவே இக்குறியீடு அப்பண்டங்களுக்கு வழங்கப்படும் சிறப்பு அங்கீகாரமாகும்.

(iv) ஒரு பொருளுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்ட பின்னர் வேறொருவர் அதற்கு புவிசார் குறியீடு அந்தஸ்தினைக் கோர முடியாது.

**29. யுக்திசார் கொள்கை குழுவின் செயல்பாடுகள் யாவை?**

(i) நாட்டின் பாதுகாப்பு விவகாரங்களில் பிரதம அமைச்சருக்கு அறிவுரை வழங்குவது.

(ii) இது தேசிய பாதுகாப்பு கவுன்சிலுக்கு உதவி செய்கிறது மற்றும் பல்வேறு விவகாரங்களை கருத்தில் எடுத்து கொண்டு அதற்கான தீர்வுகளை பரிந்துரை செய்கிறது.

(iii) தேச பாதுகாப்பு கொள்கைகளில் அரசு துறைகளுக்கிடையே ஒத்துழைப்பை பெருக்குவது மற்றும் உள்ளீடுகளை வழங்குவது.

**30. தேசிய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு கழகம் பற்றி சுருக்கமாக எழுதுக.**

(i) தன்னாட்சி கொண்ட சுய ஒழுங்காற்று அமைப்பு

(ii) வீட்டு வசதி மற்றும் நகர் புற அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

(iii) 1998-ல் அமைக்கப்பட்டது. இதன் தலைமையகம் புது தில்லியில் அமைந்துள்ளது.

(iv) இது ரியல் எஸ்டேட் துறையின் தேசிய அளவிலான உயர் அமைப்பு ஆகும். அரசாங்கம், தொழிற்துறை, பொதுமக்களுக்கு தேவையான ஒற்றை தளத்தை ஏற்படுத்தி தருகிறது.

(v) ரியல் எஸ்டேட் துறையில் வெளிப்படைத் தன்மை மற்றும் அறநெறிகளை ஊக்குவிக்கிறது. முறைப்படுத்தப்படாத இந்திய ரியல் எஸ்டேட் துறையை ஒருங்கமைத்து உலகளவில் சிறந்த துறையாக மாற்ற உதவுகிறது.

**31. மிகிங்கோ தீவு எங்கு அமைந்துள்ளது?**

(i) இது கால்பந்து ஆடுகளத்தின் பாதியளவு பரப்பு கொண்ட ஒரு தீவு ஆகும்.

(ii) இது சிறிய பாறைகளினால் ஆன தீவு.

(iii) இது விக்டோரியா ஏரி - ஆப்பிரிக்காவில் அமைந்துள்ளது.

(iv) விக்டோரியா ஏரி - ஆப்ரிக்காவின் மிகப் பெரிய ஏரி மற்றும் உலகின் மிகப் பெரிய வெப்ப மண்டல ஏரி.

**32. லோகயான் 18-ன் முக்கியத்துவம் பற்றி சுருக்கமாக எழுதுக.**

(i) லோகயான் **18** என்பது இந்திய கப்பல் படையின் ஒரு சுற்றுப்பயணம்.

(ii) 2018 ஏப்ரல் 10 அன்று உலகை சுற்றி வலம் வரும் நோக்கில் ஐ.என்.எஸ் தரங்கினி கப்பல் மூலம் இப்பயணமானது மேற்கொள்ளப்பட்டது.

(iii) பயணத்தின் போது 13 நாடுகளில் உள்ள 15 துறைமுகங்கள் வழியாக இக்கப்பல் சென்றது.

(iv) இந்த கப்பல் அரபிக் கடல், சூயஸ் கால்வாய், மத்தியத் தரைக்கடல், ஜிப்ரால்டர் நீர் சந்தி, வட அட்லாண்டிக் பெருங்கடல், பிஸ்க் வளைகுடா, இங்க்லீஷ் கால்வாய், வட கடல், நார்வே வரையிலான இடங்களை தொட்டுக் கொண்டு, மொத்தம் 7 மாதம் கடல் பயணம் மேற்கொண்ட பின்னர் நாடு திரும்பியது.

**33. 'சப்கி யோஜனா சப்கா விகாஸ்' பிரச்சாரத்தைப் பற்றி எழுதுக.**

(i) 2018 அக்டோபர் 2 அன்று 'சப்கி யோஜனா சப்கா விகாஸ்' என்ற புதிய திட்டத்தை மத்திய அரசாங்கம் தொடங்கியது.

(ii) ஊரக வளர்ச்சி திட்டங்களில் பொது மக்கள் குறிப்பாக உள்ளூர் மக்கள் பங்கு பெறுவதை ஊக்குவிக்கிறது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

(iii) இப்பயிற்சியின் மூலம் இது வரை முறைப்படுத்தப்படாத கிராம வளர்ச்சி திட்ட பணிகள் முறைப்படுத்தப்படுகின்றன.

**34. மைக்ரோபிளாஸ்டிக் வரையறு.**

(i) மைக்ரோபிளாஸ்டிக் (அ) மைக்ரோ துகள்கள் என்பவை பிளாஸ்டிக் துகள்கள் அல்லது ஃபைபர் இழைகள். இவை 1 மி.மீட்டருக்கும் குறைவான அளவுடையவை.

(ii) இவை பொதுவாக பற்பசை, அழகு சாதனப் பொருட்கள், துணிகள் மற்றும் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

(iii) இவை எளிதில் பரவும் தன்மை கொண்டவை. இவை பொருட்களுக்கு மென்மையை வண்ணங்களையும் அளிக்கிறது.

## *8 மதிப்பெண் வினாக்கள்*

**1. பிரதான் மந்திரி சஹஜ் பிஜ்லி ஹர்கர் யோஜனா திட்டத்தைப் பற்றி விவரி.**

பிரதான் மந்திரி சஹஜ் பிஜ்லி ஹர்கர் யோஜனா திட்டமானது சௌபாக்யா திட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

**நோக்கம்:**

a) ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள மின்வசதி இல்லாத குடும்பங்களுக்கு (வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மற்றும் வறுமை கோட்டிற்கு மேலுள்ள இருசாராருக்கும்) 2019, மார்ச் மாதத்துக்குள் மின்வசதியினை வழங்குதல்.

b) நாடு முழுவதும் மின்வசதி மற்றும் ஆற்றல் பாதுகாப்பை உறுதிசெய்தல்.

c) மின் இணைப்பை பெறுவதற்கு ஏழைகளிடம் இருந்து எந்த கட்டணமும் பெறப்படாது.

d) 2011-ஆம் ஆண்டின் சமூக பொருளாதார மற்றும் சாதி கணக்கெடுப்பின் தரவுகள் (Socio Eonomic and Caste Census) மூலம் இத்திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு வசதியினை பெறுவதற்கு தகுதியான பயனாளிகள் அடையாளம் காணப்படுவர்.

e) மின்மாற்றிகள், மின்சார வயர்கள், மீட்டர்கள் போன்ற சாதனங்களை வாங்குவதற்கு மானியம் வழங்கப்படும்.

**வெளிப்பாடுகள்:**

a) மண்ணெண்ணெய் விளக்குகளுக்குப் பதிலாக புதியவகை விளக்குகளை வழங்குவதன் மூலம் சுற்றுச் சூழலினை மேம்படுத்துதல்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

b) மேம்பட்ட கல்வியியல் சேவைகள்
c) சிறந்த சுகாதார சேவைகள்
d) வானொலி, தொலைக்காட்சி, கைபேசி போன்றவற்றின் மூலம் மேம்பட்ட தொடர்பு.
e) பொருளாதார செயல்பாடுகள் மற்றும் வேலைகளை அதிகரித்தல்.
f) மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தினை, குறிப்பாக பெண்களுக்கு வழங்குதல்.

**நடைமுறைப்படுத்தும் முகமை:** ஊரக மின்வசதியாக்க கழக நிறுவனம் (Rural Electrification Corporation Limited)

a) ஊரகப் பகுதிகளில் உள்ள மின் இணைப்பு வசதி இல்லாத அனைத்து குடும்பங்களுக்கும் மின் இணைப்பு வசதியினை வழங்குதல் மற்றும் நாட்டின் கடைக்கோடி பகுதிகளுக்கும் மின் இணைப்பை வழங்குதல்.
b) மின்சார வழங்கல் கட்டமைப்பை (Grid) அமைக்க சாத்தியமற்ற அல்லது அதிக செலவு பிடிக்கத்தக்க அணுக இயலாத (Remote and Inaccessible) தொலை தூர கிராமங்களில் அமைந்துள்ள மின்வசதியில்லாத குடும்பங்களுக்கு, மின் விநியோகம் செய்யத் தேவையான கட்டமைப்பை ஏற்படுத்துதல். சூரிய ஒளி மின்னழுத்த தகடுகள் அடிப்படையிலான மின் இணைப்பின்றி தனித்தியங்க வல்ல அமைப்பினை (Stand alone system) வழங்குதல்
c) நகர்ப்புற பகுதிகளில் உள்ள மின் வசதி இல்லாத பொருளாதார ரீதியில் உள்ள அனைத்து ஏழை குடும்பங்களுக்கும் மின்சார வசதியினை வழங்குதல்.
d) ஏழையில்லாத நகர்ப்புற குடும்பத்தினர் இத்திட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

**2. உத்யம் அபிலாஷா திட்டத்தைப் பற்றி எழுதுக.**

a) இது தேசிய அளவிலான தொழில் முனைவோர் விழிப்புணர்வு பிரச்சாரம்.
b) இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியினால் (SIDBI – Small Industries Development Bank of India) தொடங்கப்பட்டுள்ளது.
c) இது மகாத்மா காந்தியின் பிறந்த நாளன்று தொடங்கப்பட்டது.
d) இப்பிரச்சாரமானது நிதி ஆயோக் அமைப்பினால் 28 மாநிலங்களில் உள்ள 115 மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**பிரச்சாரத்தைப் பற்றி:**

- நாட்டின் வளர்ந்து வரும் மாவட்டங்களில் உள்ள இளைஞர்களுக்கு தொழில்முனைவு தொடர்பான பயற்சியினை வழங்குதல் மற்றும் அதன் மூலம் தொழில் முனைவுத் துறையில் சுய தொழில் நிறுவனங்களை ஏற்படுத்த ஊக்குவித்தல்.
- இப்பிரச்சாரத்தை செயல்படுத்துவதற்காக SIDBI-ஆனது இந்திய மின்-ஆளுகை சேவைகள் நிறுவனத்துடன் [CSC e-Governance] கூட்டிணைவை ஏற்படுத்தியுள்ளது. இந்நிறுவனத்தின் பொது சேவை மையங்கள் மூலம் இப்பிரச்சாரம் செயல்படுத்தப்படும். [CSC- Common Service Centres].
- இந்த மின் ஆளுகை சேவைகள் நிறுவனமானது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஓர் சிறப்பு நோக்க வாகனமாகும் (Special purpose vehicle - SPV)

**குறிக்கோள்கள்:**

a) தங்களுடைய சுய நிறுவனங்களை ஏற்படுத்துவதற்கு உதவி செய்வதன் மூலம் தொழில் முனைவோராக உருவாக்கிட உயர் லட்சிய மாவட்டங்களில் உள்ள ஊரக இளைஞர்களை ஊக்குவித்தல்.

b) நாடு முழுவதும் டிஜிட்டல் ஊடகங்கள் மூலமாக தொழில் முனைவோர் தொடர்பான பயிற்சியினை வழங்குதல்.

c) பொது சேவை மையங்களின் கிராம அளவிலான தொழில் முனைவோர்களுக்கு (CSC Village Level Entrepreneurs) வணிக தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.

d) நாட்டில் பெண்களுக்கான தொழில் முனைவுத்திறனை (Women Entrepreneurship) மேம்படுத்துவதற்காக இந்த உயர் லட்சிய மாவட்டங்களில் உள்ள பெண்கள் மீது கவனம் செலுத்துதல்.

e) தங்களுடைய சொந்தத் தொழில் நிறுவனங்களை ஏற்படுத்த வங்கிகளிலிருந்து கடன் வசதியைப் பெறவும் வங்கியியல் செயல்பாடுகளை மேற்கொள்பவராக உருவாக்கவும் திட்டத்தின் பங்கெடுப்பாளர்களுக்கு உதவுதல்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**3. பின்வருவனவற்றை விளக்குக.**

**i) சவரின் நீலப் பத்திரத்தை (Sovereign Blue Bond) அறிமுகப்படுத்தியது யார்? ஏன்?**

a) செஷல்ஸ் குடியரசானது உலகின் முதல் சவரின் நீலப் பத்திரத்தை (Sovereign Blue Bond) வெளியிட்டுள்ளது.

b) நீலப் பத்திரங்கள் அரசாங்கம் மற்றும் மேம்பாட்டு வங்கிகளால் வழங்கப்படும் கடன் சாதனங்களாகும்.

c) நேர்மறையான சுற்றுச்சூழல், பொருளாதார மற்றும் பருவநிலை நன்மைகளை உடைய கடல் சார் மற்றும் பெருங்கடல் திட்டங்களுக்கு நிதியளிக்க முதலீட்டாளர்களிடமிருந்து மூலதனத்தை திரட்ட இப்பத்திரமானது வெளியிடப்பட்டுள்ளது.

**ii) தேர்தல் நிதிப்பத்திரங்கள் (electoral bonds) பற்றி விவாதிக்க**

தேர்தல் நிதிப் பத்திரங்களானது வங்கிகளை இடைத்தரகர்களாகக் (Intermediary) கொண்டு அரசியல் கட்சிகளுக்கு நிதிகளை வழங்க கொடையாளர்களை அனுமதிக்கின்றது.

**சிறப்பு அம்சங்கள்:**

❖ கடன் உறுதிப் பத்திரங்களை (Promissory notes) ஒத்திருக்கும் வங்கியியல் சாதனங்களான (Banking Instrument) இவை எந்த வட்டியையும் கொண்டிருக்காது.

❖ தேர்தல் நிதிப் பத்திரங்கள் ஓர் கொணர்பவர் நிதி சாதனங்களாக (Bearer Instrument) இருப்பினும் இவை இந்நிதிப் பத்திரங்களினை பெறுவோரினுடைய பெயர்களை கொண்டிருக்காது.

❖ ரூபாய் 1,000, 10,000, 1 லட்சம், 10 லட்சம் மற்றும் ஒரு கோடி எனும் மதிப்புகளின் மடங்குகளில் தேர்தல் நிதிப் பத்திரங்களை வாங்கலாம்.

**காலாவதி**

❖ தேர்தல் நிதிப்பத்திரம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் மட்டுமே செல்லுபடியாகும் தன்மை (Validity) உடையது.

❖ எடுத்துக்காட்டாக, 2019 மார்ச் 1 அன்று தேர்தல் பத்திரங்கள் வழங்கப்பட்டால் அவற்றின் செல்லுபடியாகும் காலம் 2019 மார்ச் 15 வரை மட்டுமே ஆகும்.

**தகுதி:**

❖ இந்தியக் குடிமகன்கள் மற்றும் இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள அல்லது இந்திய நிறுவனங்களுடன் இணைந்து ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்கள் தேர்தல் நிதிப்பத்திரங்களை வாங்க முடியும்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

- தனிநபராகவோ அல்லது பிற தனிநபர்களுடன் இணைந்து கூட்டாகவோ ஒருவரால் இந்த தேர்தல் நிதிப் பத்திரங்களை வாங்க முடியும்.
- முந்தைய மக்களவை மற்றும் மாநில சட்டமன்ற தேர்தலில் 1 விழுக்காட்டுக்கும் குறைவில்லாத அளவில் வாக்குகளைப் பெற்ற பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் மட்டுமே இந்த தேர்தல் நிதிப் பத்திரங்களை கொடையாளர்களிடமிருந்து பெறத் தகுதியானவை.

**4. துப்புரவு மற்றும் சுகாதாரம் மீதான WHO வழிகாட்டுதல்களை விளக்குக.**

- உலக சுகாதார நிறுவனமானது துப்புரவு மற்றும் சுகாதாரத்தின் மீது முதன் முதலாக உலகளாவிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

**சிறப்பம்சங்கள்:**

- புதிய உலக சுகாதார நிறுவனத்தின் துப்புரவு மற்றும் சுகாதாரம் மீதான உலகளாவிய வழிகாட்டுதல்களானது பல்வேறு வகையிலான துப்புரவு தலையீடுகளின் (Sanitation Intervention) செயல்திறன் பற்றிய ஆதாரங்களை தொகுத்து அளிக்கின்றது.
- சுகாதார - பாதுகாப்பிற்கான தூய்மையுடைமை (health - Protecting) சுகாதார கொள்கை மற்றும் ஆளுகை நடவடிக்கைகள், சுகாதார துப்புரவுத் தொழில் நுட்பங்களின் அமலாக்கம், நடத்தை முறைகளிலான தலையீடுகள் (Behavioural Interventions) இடர் - அடிப்படையிலான மேலாண்மை (risk-based), மற்றும் கண்காணிப்பு அணுகுமுறைகள் போன்றவற்றிற்கான கட்டமைப்புகளை இந்த வழிகாட்டுதல்கள் வழங்குகின்றன.
- துப்புரவு தலையீடுகளின் சுகாதார தாக்கத்தினை (Health Impact) இந்த வழிகாட்டுதல்கள் அதிகப்படுத்துகின்றன.
- துப்புரவு தலையீடுகளின் செயல்திறனுடைமையினை அதிகரிப்பதற்கு எதிர்வாக ஆராய்ச்சி முயற்சிகளுக்கு வழிகாட்ட, ஆராய்ச்சிகளுக்கான ஆதார அடிப்படைகளில் (evidence - base) உள்ள, இடைவெளிகளை இந்த வழிகாட்டுதல்கள் அடையாளம் காட்டுகின்றன.

**துப்புரவு மற்றும் சுகாதாரம் மீதான உலகளாவிய வழிகாட்டுதல்களுக்கான தேவை:**

- சுகாதாரம் மற்றும் துப்புரவிற்கு முறையான மற்றும் போதுமான அளவிலான அணுகல் இல்லாமல் உலகம் முழுவதும் பல மில்லியன் மக்கள் தங்களுடைய கண்ணியத்தை இழந்து காணப்படுகின்றனர். பாதுகாப்பான கௌரவமான கழிப்பறை வசதியினையும் இன்றி காணப்படுகின்றனர்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

- ❖ துப்புரவு மற்றும் தூய்மையானது மனித ஆரோக்கியம் மற்றும் மேம்பாட்டிற்கு அடிப்படை அடித்தளமாகும். உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நாடுகளின் சுகாதார அமைச்சகங்கள் மற்றும் உலக சுகாதார நிறுவனத்தினுடைய மையத்திட்ட நோக்கமாக சுகாதாரம் மற்றும் துப்புரவே காணப்படுகின்றது.
- ❖ அனைத்து இடங்களிலும் அனைவருடைய நலவாழ்வு மற்றும் சுகாதாரத்தினை உறுதி செய்ய உலக சுகாதார நிறுவனத்தின் துப்புரவு மற்றும் சுகாதாரம் மீதான உலகளாவிய வழிகாட்டுதல்கள் மிகவும் அத்தியாவசியமானவையாகும்.

**முக்கியத்துவம்:**

- ❖ புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களின் பரவலுக்கு மோசமான துப்புரவு மற்றும் சுகாதாரமே முக்கிய காரணமாகும்.
- ❖ தற்சமயம் நடப்பிலுள்ள சுகாதார துப்புரவுத் திட்டங்கள் எதிர்பார்த்த சுகாதார நன்மைகளை உண்டாக்காததால், உலக சுகாதார நிறுவனத்தின் துப்புரவு மற்றும் சுகாதாரம் மீதான புதிய வழிகாட்டுதல்களை ஏற்று நடைமுறைப்படுத்துவதன் மூலம் உலக நாடுகளில் பாதுகாப்பற்ற குடிநீர், சுகாதாரம் மற்றும் தூய்மையின்மை போன்றவற்றின் காரணமாக ஏற்படும் வயிற்றுப் போக்கு போன்ற பிரச்சனைகளின் இறப்புகளை கணிசமான அளவில் குறைக்க முடியும்.

**5. பின்வருவனவற்றை விளக்குக.**

**a) நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர்களை தகுதி நீக்கம் செய்யத் தேவையான அடிப்படை நெறிமுறைகள் (Basic Criteria) யாவை?**

- ❖ நாடாளுமன்ற உறுப்பினரை தகுதி நீக்கம் செய்வதற்கான அடிப்படை தகுதி நீக்க வரைமுறையானது அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 102ல் குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினரை தகுதி நீக்கம் செய்வதற்கான அடிப்படை தகுதிநீக்கம் வரைமுறை அரசியலமைப்பு சட்டத்தின் விதி 191ல் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர்களை பின்வரும் காரணங்களுக்காகத் தகுதி நீக்கம் செய்யலாம்.
  1. இந்திய அரசின் கீழோ அல்லது மாநில அரசின் கீழோ பிற ஆதாயம் தரும் பதவிகளை வகித்தால்.
  2. தெளிவான மனோநிலை அற்றவராக இருந்தால் (Unsound mind).

3. கடனை திரும்ப செலுத்த இயலாத திவால்தாரியாக (Insolvent) இருந்தால்.
4. இந்தியக் குடிமகனாக இல்லாமல் இருந்தால் அல்லது வேறொரு நாட்டிலிருந்து குடியுரிமையைப் பெற்றிருந்தால்

**b) மாநிலத்தின் பெயரை மாற்றுவதற்கான அரசியலமைப்பு நடைமுறைகளை குறிப்பிடுக.**

- ஒரு மாநிலத்தின் பெயரை மாற்றுவதற்கு அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 3 மற்றும் 4-ன் கீழ் பாராளுமன்றத்தின் அனுமதி தேவை.
- குடியரசுத் தலைவரின் பரிந்துரையின் பெயரில் மாநிலத்தின் பெயரினை மாற்றுவதற்கான மசோதா ஒன்று நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.
- இம்மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்வதற்கு முன்னர், மசோதாவின் மீதான தங்கள் கருத்து மற்றும் கண்ணோட்டத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் தெரிவிக்குமாறு பெயர் மாற்றம் செய்யப்பட உள்ள மாநிலத்திற்கு இம்மசோதா அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- குறிப்பிட்ட காலத்திற்குள் காலாவதி ஆகும் வேளையில் இம்மசோதாவானது நாடாளுமன்றத்தின் விரிவான விவாதத்திற்காக நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இம்மசோதா சட்டத்தின் செயலாக்கத்தைப் (Force of law) பெறுவதற்கு நாடாளுமன்றத்தில் எளிய பெரும்பான்மையில் கண்டிப்பாக நிறைவேற்றப்பட வேண்டும்.
- பின்னர் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக இம்மசோதா குடியரசுத் தலைவரின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- குடியரசுத் தலைவரின் அனுமதியைப் பெற்ற பிறகு இம்மசோதா (bill) சட்டமாக (law) உருப்பெற்று மாநிலத்தின் பெயர் மாற்றப்பட்டதாகக் கருதப்படும்.

**6. இந்திய போட்டி ஒழுங்குமுறை ஆணையத்தைப் பற்றி விளக்குக?**

- இந்தியப் போட்டிச் சட்டமானது (Indian Competition Act-2002) 2007 ஆம் ஆண்டு திருத்தப்பட்டது.
- இச்சட்டமானது போட்டித் தன்மைக்கு எதிரான ஒப்பந்தங்களை தடைசெய்கிறது. மேலும் நிறுவனங்கள், சந்தையில் தங்களுடைய மேலாதிக்க நிலையை தவறாக பயன்படுத்துவதை தடை செய்கின்றது.

- நிறுவனங்களின் ஒன்றிணைவை (நிறுவன கையகப்படுத்துதல், நிறுவனங்களின் மீது கட்டுப்பாட்டை பெறுதல், மேலாண்மை மற்றும் நிர்வாகம்) போன்றவற்றை ஒழுங்குமுறைப்படுத்துகின்றது.

**இந்திய போட்டி ஒழுங்கு முறை ஆணையம்:**

- இந்த ஆணையமானது, இந்திய போட்டிச் சட்டம் 2002-ன் கீழ் உருவாக்கப்பட்டது.
- இந்தியப் போட்டிச் சட்டத்தில் அமலாக்கம், நிர்வாகம், செயல்பாடு போன்றவற்றிற்காக இந்திய போட்டி ஒழுங்குமுறை ஆணையமானது முறையாக 2009-ஆம் ஆண்டு மார்ச் மாதம் உருவாக்கப்பட்டது.
- இந்த ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மத்திய அரசால் நியமிக்கப்படுவர்.

**குறிக்கோள்:**

- போட்டியிடும் சூழலின் மீது பாதகமான விளைவுகளை கொண்டுள்ள நடைமுறைகளை தடுத்தல்.
- சந்தைகளில் போட்டித் தன்மையை மேம்படுத்துதல் மற்றும் நீடிக்கச் செய்தல்.
- நுகர்வோர்களின் நலன்களை பாதுகாத்தல்
- வர்த்தக சுதந்திரத்தை உறுதி செய்தல்.

**பணிகள்:**

- போட்டித்தன்மை மீது பாதகமான எதிர்மறை விளைவுகளை கொண்டுள்ள நடைமுறைகளை நீக்குதல் சந்தைகளில் போட்டித்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் நீடிக்கச் செய்தல்.
- நுகர்வோர்களின் நலன்களை பாதுகாத்தல், இந்தியச் சந்தைகளில் வர்த்தக சுதந்திரத்தை உறுதிசெய்தல்.
- இது சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சட்ட ரீதியான அதிகார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட போட்டித் தன்மை தொடர்பான விவரங்கள் மீது தங்கள் கருத்தினை தெரிவித்தல்.
- போட்டித்தன்மை தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல், பொதுமக்களிடம் அது தொடர்பான விழிப்புணர்வை உண்டாக்குதல், போட்டித்தன்மை விவகாரங்கள் மீது பயிற்சி வழங்குதல்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**7. மாநில நதி நீர் படுகை என்றால் என்ன? மாநில நதிநீர் படுகை மேலாண்மையின் நன்மைகளைக் குறிப்பிடுக.**

**நதி நீர் படுகை:**

- நதி நீர் அமைப்பின் நீர்ப் பிரிப்பு எல்லையினால் நிர்ணயிக்கப்படும் புவியியல் பரப்பே நதி நீர் படுகை ஆகும்.
- நதியானது நேரடியாகவோ அல்லது வேறொரு இறையாண்மையுடைய நாட்டின் வழியாகவோ அல்லது கடலிலோ கலக்கும் அல்லது வெளியேற்ற அமைவு இல்லாத இயற்கை ஏரிகளில் கலக்கும்.

**நன்மைகள்:**

**1. பொருளாதார முக்கியத்துவம்**

a) பனி உருகுதல் மற்றும் மழைப்பொழிவு ஆகியவற்றிலிருந்து வழிந்தோடும் நீரை உட்கிரகித்து கொள்கிறது. மேலும் அவற்றை நீர் வழிந்தோடும் வாய்க்கால் போன்ற அமைப்புகளால் பாயச் செய்கின்றது.

b) தூய குடிநீரை வழங்குகின்றது. உணவு, நீர்மின்சக்தி மற்றும் கட்டுமானப் பொருட்களுக்கான நீரை வழங்குகின்றது.

c) எடுத்துக்காட்டு: கூரை வேய்தலுக்கான நாணல்கள் (Reeds for thatching), மருந்து பொருட்கள், புத்துணர்ச்சிக்கான வாய்ப்புகள்.

**2. நீர் மாசுபாட்டை கட்டுப்படுத்துதல்**

a) நதிநீர் வடிகால்கள், இயற்கையான வடிகட்டிகள் மற்றும் "நீர் உறிஞ்சிகள்" (Sponges) ஆகும்.

b) நீரினைத் தூய்மைப்படுத்துதல், நீர்த்தேக்கம், வெள்ளப் பெருக்கினை கட்டுப்படுத்துதல் போன்றவற்றில் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

**3. சூழலியல் சேவைகள்**

a) நிலம் மற்றும் கடலுக்கு இடையே ஓர் முக்கிய இணைப்பாக நதி நீர் வடிகால்கள் செயல்படுகின்றன. மேலும் மக்களுக்கு நீர்வழிப் போக்குவரத்து வழித்தடத்தினை வழங்குகின்றன.

b) கடல் மற்றும் நன்னீர் அமைப்புகளுக்கு இடையே மாறி மாறி இடம் பெற மீன்களுக்கு சாத்தியமான நிலையை உருவாக்குகின்றது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

**4. உயிரிப் பல்வகைத்தன்மை பாதுகாப்பு**

a) நதி நீர் வடிகால் மேலாண்மையானது நிலவியல் (Terrestrial) (வனம் மற்றும் புல்வெளி) மற்றும் நீர்நிலை (எ.கா: நதி, ஏரி, சதுப்பு நிலம்) அமைப்பின் கூறுகளையும் ஒன்றிணைக்கின்றன.

b) விலங்குகள் மற்றும் தாவரங்களுக்கு பரந்த வேறுபட்ட பல்வகை வாழிடங்களை வழங்குகின்றது.

**8. பிஸ்பினால் - A (Bisphenol-A-BPA) பற்றி விவாதி.**

a) பிஸ்பினால் - A (BPA) ஆனது பெரும் அளவில் உற்பத்தி செய்யப்படும் ஓர் இரசாயனமாகும்.

b) இது பாலிகார்பனேட் பிளாஸ்டிக்குகள் மற்றும் ஈபாக்ஸி ரெசின்களின் உற்பத்தியில் முதன்மையாக பயன்படுகின்றது.

c) பாலிகார்பனேட் பிளாஸ்டிக்குகளானவை உணவு மற்றும் குளிர்பான பதப்படுத்துதல் உட்பட பல்வேறு பயன்பாடுகளை கொண்டுள்ளன.

d) உணவு கேன்கள், பாட்டில் முனைகள், நீர் விநியோகிப்பு குழாய்கள் போன்ற உலோகப் பொருட்களினை பூச்சிட, ஈபாக்ஸி ரெசின்களானவை அரக்குகளாகப் (Lacquers) பயன்படுத்தப்படுகின்றன.

e) எ.கா: குடிநீர் மற்றும் குழந்தைகள் பயன்படுத்தும் பாட்டில்கள், அழுத்தங்களை தாங்கும் பாதுகாப்பு உபகரணங்கள், பதிவு வட்டுகள் (Compact disc) மற்றும் மருத்துவ சாதனங்கள்.

f) பாதுகாக்கப்பட்ட உட்புற ஈபாக்ஸி ரெசின் பூச்சுடைய பதப்படுத்தப்பட்ட கொள்கலன்களில் அடைக்கப்பட்ட உணவுகளில் இருந்து BPA ஆனது உணவில் கலக்கின்றது.

g) BPA பூச்சுடைய பாலிகார்பனேட் பாட்டில்களினுள் உள்ள திரவத்தில் BPA ஆனது கொள்கலனின் ஆயுளைக் காட்டிலும் அந்த பாட்டிலின் அல்லது திரவத்தின் வெப்பநிலையை பொறுத்ததாகும்.

h) BPA ஆனது நாளமில்லா சுரப்பிகளை பாதிக்கக் கூடிய ஒன்றாகும். இயற்கையான ஹார்மோன்களின் உற்பத்தி மற்றும் செயல்பாட்டிலும் BPA ஆனது குறுக்கிடுகின்றது.

i) உயர் இரத்த அழுத்தம் உண்டாகவும் BPA வழி வகுக்கிறது.

j) தாய்மார்களின் மார்பகச் சுரப்பிகளிலும் BPA ஆனது காணப்படுகின்றது.

k) இதன் நீண்ட நேர வெளிச் சூழலுடனான வெளிப்பாடு குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பாதிக்கும் என சந்தேகிக்கப்படுகின்றது.

**9. பின்வருவனவற்றை விளக்குக.**

**a) ராஷ்டிரிய மஹிளா கிஷான் திவாஸ் எப்போது கொண்டாடப்படுகிறது?**

- தேசிய பெண் விவசாயிகள் தினம் அல்லது மகிளா கிஷான் திவாஸ் ஆண்டுதோறும் அக்டோபர் 15-அன்று கொண்டாடப்படுகிறது.

**b) வேளாண்மையில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள்**

**நில உரிமை பிரச்சினைகள் (Issue of land Ownership)**

- மிகப்பெரிய சவாலாக பெண்களின் அதிகாரமற்ற நிலை உள்ளது. அதாவது தாங்கள் சாகுபடி செய்யும் நிலத்தின் மீது உரிமையை கோருவதில் அதிகாரமற்றவர்களாக உள்ளனர்.
- 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி வெறும் 12.8 விழுக்காடு வேளாண் நிலங்களுக்கு மட்டுமே பெண்கள் உரிமையாளர்களாக உள்ளனர்.
- இது வேளாண்மையில் நில உடைமை மீது உரிமைத்துவத்தைப் பெற்றிருப் பதில் காணப்படுகின்ற பாலின வேறுபாட்டை வெளிக்காட்டுகின்றது.

**நிறுவன கடன் வசதி இல்லாமை (Lack of Institutional credit)**

- வங்கிகள் பொதுவாக நிலங்களை கடன் உறுதிப் பிணையங்களாக (Collateral) கோருவதால் நிலத்தின் மீது உரிமை இல்லாத பெண் விவசாயிகள் வங்கிக் கடன் பெற வங்கிகளை அணுகுவதில் சிக்கல் நிலவுகிறது.

**அங்கீகாரமின்மை**

- ஆக்ஸ்பாம் இந்தியா [Oxfam India] அமைப்பின் அறிக்கையின்படி, நாட்டில் 60-80 விழுக்காடு உணவு உற்பத்திக்கும், 90 விழுக்காடு பால்வள உற்பத்திக்கும் பெண்களே காரணமாவர்.
- இருப்பினும் பயிர் சாகுபடி, வீடுகள் அல்லது பண்ணைகளில் பெண்களால் மேற்கொள்ளப்படும் பணிகள் பெரும்பாலும் பொது வெளியில் கவனிக்கப்படாமல் உள்ளது.

**ஒப்பந்த வேளாண்மை** (Contract Faming)

- பெண் விவசாயிகள் நவீன ஒப்பந்த வேளாண்மை ஏற்பாடுகளிலிருந்து பெருமளவில் தவிர்க்கப்பட்டு வருகின்றனர்.
- உற்பத்தி பொருட்களில் நம்பகமான பரிமாற்றம், உத்திரவாத விநியோகத்துக்கு தேவையான நிலம், குடும்ப தொழிலாளர்கள்

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

மற்றும் பிற மூல ஆதாரங்கள் போன்றவற்றின் மீது உறுதியான கட்டுப்பாடு இல்லாமல் பெண்கள் காணப்படுகின்றனர்.

**வேளாண்மையில் புத்தாக்க கண்டுபிடிப்புகள்**

- குறிப்பிட்ட மனித உழைப்பு மூலமான பணிகளை தானியங்கி கருவிகள் மூலம் மேற்கொள்ள புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தும் போது பெண்கள் தங்கள் வேலையை இழக்கின்றனர். ஏனெனில் பெண்கள் தான் வேளாண்மையில் மனித உழைப்புப் பணிகளை (Manual Duties) மேற்கொள்கின்றனர்.

**பயிற்சி இன்மை**

- மிகப் பெரிய எண்ணிக்கையில் பெண் விவசாயிகள் காணப்பட்டாலும் கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு மற்றும் ஊரகக் கைவினைப் பொருட்கள் தயாரிப்பு போன்றவற்றில் பயிற்சி அளித்தல் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

**பாலின பாகுபாடு:**

- இந்தியாவின் கிட்டத்தட்ட 78 சதவீத பெண் விவசாயிகள் பாலின பாகுபாட்டை (Gender Discrimination) எதிர்கொள்கின்றனர்.

**உள்ளீடுகள் மற்றும் மூல ஆதாரங்களுக்கான அணுகல் :**

- ஆண்களை ஒப்பிடுகையில் வேளாண்மையை மிகவும் உற்பத்தித் திறனுடையதாக மாற்ற மூல ஆதாரங்கள் மற்றும் நவீன உள்ளீடுகளுக்கு (விதைகள், உரங்கள், பூச்சிக் கொல்லிகள்) பெண்கள் பொதுவாக குறைந்த அளவிலான அணுகலையேக் கொண்டுள்ளனர்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## 15 மதிப்பெண் கேள்வி

**1. பின்வருவனவற்றை விளக்குக.**

**i) IMPRESS திட்டத்தினைப் பற்றி எழுதுக.**

**நோக்கம்:**

a) சமூக அறிவியலில் தாக்கம் உண்டாக்கக் கூடிய கொள்கை ஆராய்ச்சி (impactful policy research in social science - IMPRESS).

b) கல்வியியல் நிறுவனங்களில் ஆராய்ச்சிக்கான சூழலமைவைக் கட்டமைத்தல்

c) மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்.

**குறிக்கோள்:**

a) ஆளுகை மற்றும் சமுதாயம் மீதான அதிகபட்ச தாக்கத்தோடு சமூக அறிவியலில் ஆராய்ச்சி முன்மொழிவுகளை அடையாளம் காணல் மற்றும் அவற்றிற்கு நிதியளித்தல்.

b) அனைத்து அரசு பல்கலைக்கழகங்கள் (மத்திய மற்றும் மாநில பல்கலைக்கழகங்கள்) மற்றும் தகுதித் தேவையை பூர்த்தி செய்கின்ற சில தனியார் கல்வி நிறுவனங்கள் உட்பட நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் சமூக அறிவியல் ஆராய்ச்சியாளர்களுக்கு இத்திட்டம் ஆராய்ச்சிக்கான வாய்ப்பினை வழங்குகின்றது.

c) நாடு மற்றும் ஜனநாயகம், நகர்ப்புற மாற்றம், ஊடகம், கலாச்சாரம் மற்றும் சமூகம், வேலைவாய்ப்பு, திறன் மற்றும் கிராமப்புற மாற்றம், ஆளுகை, புத்தாக்கம் மற்றும் பொது கொள்கை, பேரியல் - வர்த்தகம் (Macro trade) மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றின் மீது இத்திட்டம் கவனம் செலுத்துகின்றது.

d) இத்திட்டத்தின் கீழ் உயர் கல்வி நிறுவனங்களில் சமூக அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு ஆதரவளிக்க 1,500 ஆராய்ச்சித் திட்டங்களை இரண்டு ஆண்டுகளுக்குள் மேற்கொள்ள வழிவகை செய்யப்படும்.

e) அமலாக்க நிறுவனம்: இந்திய சமூக அறிவியல் மற்றும் ஆராய்ச்சி கவுன்சில் (ICSSR – Indian Council for Social Science and Research)

f) இத்திட்டம் மார்ச் மாதம் 2021-வரை அமல்படுத்தப்படும்.

**ii) ராஷ்டிரிய வயோஸ்ரீ யோஜனா திட்டத்தைப் பற்றி விவாதி.**

**நோக்கம்:**

a) வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மாற்றுத் திறனாளிகள் மற்றும் வயதான மூத்த குடிமக்களுக்கு, உதவுதல் மற்றும் உதவிகர

வாழ்கைத் துணைநல சாதனங்களை இலவசமாக வழங்குதல் (Aids & Assistive Living devices)

b) மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்பு அமைச்சகத்தினுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளிப்பதற்கான துறையினால் (Department of Empowerment of Person with Disability) இத்திட்டம் ஒருங்கிணைக்கப்படுகின்றது.

**குறிக்கோள்:**

a) 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் வயதான மூத்த குடிமக்களின் எண்ணிக்கை 10.38 கோடி ஆகும்.

b) 70 சதவீதத்திற்கு அதிகமான மூத்த குடிமக்கள் நாட்டின் ஊரகப் பகுதிகளில் வாழ்கின்றனர்.

c) வயது தொடர்பான குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள நபர்கள் மற்றும் பார்வைக் குறைபாடு, கேட்டல் குறைபாடு, பற்கள் இழப்பு போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் வாழ்க்கைத் துணை நல உதவிகர சாதனங்கள் வழங்கப்படும்.

d) மத்திய அரசினால் இத்திட்டத்திற்கு முழு நிதியளிப்பு வழங்கப்படுகிறது.

e) "இத்திட்டத்தின் அமல்பாட்டிற்குத் தேவையான செலவுத் தொகையானது மூத்த குடிமக்கள் நலவாழ்வு நிதியத்திலிருந்து" (Senior Citizens' welfare fund) பெறப்படும்.

f) ஒரே நபர் பல்வேறு குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள வேளையில் அந்நபருக்கு ஒவ்வொரு குறைபாட்டிற்கும் ஏற்ற துணை நல சாதனங்கள் வழங்கப்படும்.

g) மாவட்ட ஆட்சியர் அல்லது துணை ஆணையர் தலைமையிலான கமிட்டியின் வழியே மாநில அரசுகள் அல்லது யூனியன் பிதேச அரசுகளின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் பயனாளிகள் அடையாளம் காணப்படுவர்.

h) இத்திட்டத்தினுடைய கூற்றின்படி, இயன்றவரை ஒவ்வொரு மாவட்டத்திலும் பயன்பெறும் பயனாளிகளுள் 30 விழுக்காடு பயனாளிகள் பெண்களாக இருக்க வேண்டும்.

## 30 மதிப்பெண் வினாக்கள்

**1) POCSO சட்டத்தைப் பற்றி கட்டுரை எழுதுக.**

**(i) வரையறை :**

a) பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012, (Protection of Children from Sexual Offences Act – POCSO Act 2012)

b) இச்சட்டத்தின் கீழ் 18 வயதிற்கு உட்பட்டவர்கள் குழந்தைகளாக (Children) கருதப்படுவர். அவர்களுக்கெதிரான பாலியல் செயல்பாடுகள் தண்டனைக்குரிய பாலியல் குற்றமாகும்.

c) இச்சட்டமானது முதன்முறையாக “பாலியல் தாக்குதல்” (Sexual Assault), “பாலியல் துன்புறுத்தல்” (Sexual Harassment) போன்றவற்றை விளக்குகின்றது.

d) இச்சட்டமானது சில சூழ்நிலைகளின் கீழ் பாலியல் தாக்குதல்களினை “மிக மோசமானதாக” கருத வழி வகுக்கிறது.

e) பாலியல் சீண்டல்களுக்கு உள்ளான குழந்தைகள் மன நல வளர்ச்சி இல்லாமல் இருந்தாலோ அல்லது குடும்ப உறுப்பினர், காவல் அலுவலர், ஆசிரியர், மருத்துவர் போன்ற நம்பிக்கைக்குரிய அல்லது அதிகார நிலையில் உள்ள நபர்களால் இச்செயல் மேற்கொள்ளப்படும் போதோ இது மிகப் பெரும் குற்றமாகக் கருதப்படும்.

**(ii) POCSO சட்டத்தின் அமலாக்கம்**

a) சிறப்பு நீதிமன்றங்களை நியமித்தல்

b) சிறப்பு பொது நல வழக்கறிஞர்களை நியமித்தல்.

c) பல்வேறு பங்கெடுப்பாளர்களுக்காக POCSO சட்டத்தின் பிரிவு 39-ன் கீழ் வழிகாட்டுதல்களை வகுத்தல்.

d) POCSO சட்டத்தின் சட்டக் கூறுகளைப் பற்றி பொதுமக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

e) குழந்தைகள் நலவாழ்வு குழுக்கள் (Children Welfare Committee) மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு மையங்கள் (District Child Protection Units – DCPUS) மற்றும் சிறப்பு சிறார் காவல் அமைப்புகள் (Special Juvenile Police Units – SJPU) போன்றவற்றை அமைத்தல்.

**(iii) சட்டக்கூறுகள்:**

a) POCSO சட்டத்தின் பிரிவு 19 ஆனது குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் பற்றி புகார் தெரிவிப்பதற்கான

செயல்முறைகளை வழங்குகின்றது. இருப்பினும் புகார் தெரிவிப்பதற்கான கால வரம்பினை இது குறிப்பிடவில்லை.

b) ஆனால், அதே சமயம் இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டமானது (CrPC) குழந்தைகளுக்கெதிரான பாலியல் குற்றங்களைப் பற்றி புகார் தெரிவிக்க வெவ்வேறு கால வரம்புகளை வழங்குகின்றது. இச்சட்டத்தின் மூலம் 8 ஆண்டுகள் வரை தண்டனை வழங்கப்படும். குற்றங்களுக்கு தண்டனை வழங்குவதில் எந்த கால வரம்பும் கிடையாது. மூன்று ஆண்டுகளுக்கு அதிகமாக சிறைத் தண்டனை வழங்கப்படும்.

**(iv) முக்கியத்துவம்**

a) பாலியல் துஷ்பிரயோகத்தினால் உயிர் பிழைத்தவர்களுக்கு நீதி கிடைப்பதில் இது ஓர் முக்கியமான முன்னெடுப்பாகும். ஏனெனில் இவர்கள் தன்மீது நடந்த பாலியல் தாக்குதல் பற்றி புகார் தெரிவிக்க முயற்சித்தும், ஓர் வயது வந்தோர் (Adult) என்பதால் புகாரை அளிக்காது காவல் நிலையத்திலிருந்து திரும்பி இருக்கலாம்.

b) பல்வேறு வழக்குகளில் குற்றங்களினைப் புரிந்தவர் தம் குடும்பத்தவராகவோ அல்லது பிற தெரிந்த நபராகவோ இருப்பதால் பாலியல் தாக்குதலுக்கு ஆளான குழந்தைகள் அத்தாக்குதல்களைப் பற்றி வெளியே தெரிவிக்க இயலாமல் இருக்கின்றன என்ற உண்மை கருத்தில் கொள்ளப்பட்ட பின்பே இந்த சட்ட உருவாக்கமானது முக்கியத்துவம் பெறுகின்றது.

c) பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் வளர்ந்து அதன் பின்பே தன் மீது நடந்த குற்றங்களைப் பற்றி ஓர் புரிதலைப் பெறுகின்றனர்

**(v) காவல்துறையினரின் பங்கு**

a) விசாரணை செயல்முறைகளின் போது காவல்துறையினர், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பாளர்களாக செயல்படுவர்.

b) குழந்தைகளின் பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பான அறிக்கையைப் பெறும் காவல் பணியாளர்களுக்கு பாதிக்கப்பட்ட குழந்தையின் பாதுகாப்பு மற்றும் சிகிச்சைக்கு தேவையான அவசர ஏற்பாடுகளை நிறைவேற்றும் பொறுப்பானது வழங்கப்படும்.

**(vi) பாதுகாப்பு**

a) தாமதமாக நடைபெறும் வழக்கு விசாரணை செயல்பாடுகளினால் நீதி அமைப்பின் கைகளில் குழந்தைகள் மீண்டும் பாதிக்கப்படுவதை தவிர்க்கும் வகையில் சிறப்பு சட்டக் கூறுகளை இச்சட்டமானது உருவாக்கியுள்ளது.

b) குழந்தைகளின் நலனுக்கு உகந்த வகையில், குழந்தைகளின் அடையாளத்தை வெளிக்காட்டாது, காணொளி பதிப்புடன் வழக்கு விசாரணையை மேற்கொள்ள சிறப்பு நீதிமன்றங்களை ஏற்படுத்த இச்சட்டம் வழிவகுக்கின்றது.

c) பாதிக்கப்பட்ட குழந்தை, வழக்கு விசாரணையின் போது சாட்சியம் அல்லது வாக்கு மூலம் அளிக்கையில் தன் பெற்றோருடனோ அல்லது வேறு பிற நம்பகமானவர்களின் முன்னிலையிலோ வாக்குமூலம் அல்லது சாட்சியம் அளிக்க இடம் தருகின்றது. மேலும் சாட்சி அளிக்கும்போது மொழி பெயர்ப்பாளர், சிறப்புக் கல்வியியாளர் அல்லது பிற நிபுணர்களிடம் இருந்து உதவியினை பெறவும் இடம் தருகின்றது.

d) இவற்றிற்கும் மேலாக இச்சட்டமானது குழந்தைகளின் பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பான வழக்குகள், பாலியல் குற்றம் பற்றி புகார் தெரிவிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடத்திற்குள் முடித்து வைக்கப்பட வேண்டும் என்ற கால வரையறையானது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**(vii) கட்டாய புகார் அளிப்பு** :

a) இச்சட்டமானது பாலியல் குற்றங்கள் தொடர்பாக கட்டாய புகாரளிப்பிற்கு சில சட்டக் கூறுகளை வழங்கியுள்ளது. ஓர் குழந்தை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிந்துள்ள நபர்கள் அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்க இச்சட்டமானது அவர்களின் மீது ஓர் சட்ட ரீதியான கடமையை (Legal Duty) உண்டாக்குகின்றது.

b) பாலியல் துஷ்பிரயோகம் நடந்தது தெரிந்தும் புகார் அளிக்க தவறுகின்ற நபர்களுக்கு ஆறு மாத சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ விதிக்கப்படும்.

**2) மின்னணு சாதனங்கள் மீதான தேசிய கொள்கை - 2018 வரைவு பற்றி விவரித்து எழுதுக.**

**நோக்கம்** :

(i) நாட்டில் 2025 ல் 400 பில்லியன் டாலர் மதிப்புடைய மின்னணு பொருட்கள் உற்பத்தி தொழிற்துறையை உண்டாக்குதல்.

(ii) அலைபேசிகளின் உற்பத்தி இலக்கை இருமடங்காக்குதல். 2019ஆம் ஆண்டில் 500 மில்லியன் அலைபேசிகள் உற்பத்தி செய்தல் என்ற அளவிலிருந்து 2025ல் 1 பில்லியன் அலைபேசிகளை உற்பத்தி செய்தல் என்ற அளவிற்கு உற்பத்தி இலக்கினை இருமடங்காக்குதல்.

(iii) மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது (Meity – Ministry of Electronic and Information technology) இந்த வரைவை உருவாக்கியுள்ளது.

**மின்னணு சாதனங்கள் மீதான தேசிய கொள்கையின் அவசியம்**

(i) இந்திய மின்னணு வன்பொருட்கள் உற்பத்தி தொழிற் துறையானது பல்வேறு குறைபாடுகள் காரணமாக பிற நாடுகளுடன் போட்டியிட, நிலையான வளர்ச்சி மற்றும் சிறந்த வாய்ப்புக் காரணிகள் இல்லாமல் காணப்படுகின்றது.

(ii) இதனால் உள்நாட்டு மின்னணு வன்பொருள் சாதனங்களின் தயாரிப்பு போட்டித்திறனற்றதாக காணப்படுகின்ற போது உள்கட்டமைப்பு வசதியின்மை, விநியோகிப்பு சங்கிலி மற்றும் பண்டக போக்குவரத்து போன்றவை போதுமான அளவில் இல்லாமல் இருத்தல், உயர் செலவு, தரமான ஆற்றல் போதுமான அளவில் கிடைக்காமை, போதுமான அளவில் இல்லாத மின்னணு பொருட்களினுடைய கூறுகளின் உற்பத்தி அடித்தளம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மீது தொழிற்சாலைகளின் குறைவான கவனம், உயர் அளவிலான சந்தை அணுகல், குறைந்த அளவிலான மதிப்புக் கூட்டு செயல்முறைகள்.

(iii) 2023-24–ம் ஆண்டில் மின்னணு ஹார்ட்வேர் சாதனங்களுக்கான தேவை 400 மில்லியன் டாலர் என்ற அளவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், மின்னணு சாதனங்களின் இறக்குமதியினால் மட்டும் பெரிய அளவில் அந்நிய செலாவணி கையிருப்பிலிருந்து காலியாவதை இந்தியாவால் சரி செய்து கொள்ள இயலாது. அதனால் உயர் மதிப்பு கூட்டுதலுடன் உள்நாட்டு மின்னணு வன்பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்துவது இச்சமயத்தில் மிகவும் அவசியமாகிறது.

(iv) 2012-ஆம் ஆண்டின் மின்னணு சாதனங்கள் மீதான தேசியக் கொள்கையின் கீழான திட்டங்களின் செயலாக்கமானது போட்டித் தன்மையுடைய இந்திய ESDM மதிப்பு சங்கிலிகளுக்கு ஓர் அடித்தளத்தினை வெற்றிகரமாக ஒருங்கமைத்துள்ளது.

(v) நாட்டில் ESDM தொழிற்துறையின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான அடித்தளத்தினை கட்டமைக்க தற்போது அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

**தேசிய மின்னணு சாதனங்கள் வரைவுக் கொள்கை 2018-ன் சிறப்பம்சங்கள்**

(i) **கைபேசிகள்** : 110 பில்லியன் டாலர்கள் என்ற அளவிற்கு கைபேசிகளை ஏற்றுமதி செய்தல் உட்பட 190 பில்லியன் டாலர்கள் என்ற மதிப்பளவிற்கு

2025ல் நாட்டில் ஒரு பில்லியன் கைபேசிகளை இந்தியாவில் உற்பத்தி செய்ய இந்த கொள்கையானது இலக்கு நிர்ணயித்துள்ளது. மேலும் மின்னணு சாதனங்களின் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு எளிதாக வணிகம் செய்யும் சூழலை மேம்படுத்த இக்கொள்கையானது இலக்கு நிர்ணயித்துள்ளது.

(ii) **மின்னணு சாதனங்களின் உற்பத்தித் திரள்கள் (Electronics manufacuting Cluster)** : அரசின் பங்களிப்பான 225 பில்லியன் டாலர்கள் உட்பட மொத்தம் 550 மில்லியன் டாலர்கள் திட்ட மதிப்பீட்டில் நாட்டில் மின்னணு சாதனங்களின் உற்பத்திக்காக 20 புதிய மின்னணு சாதன உற்பத்தி மையங்களுக்கும் (Green field Electronic manufacturing Centre), ஏற்கனவே தொடங்கப்பட்டு செயல்பட்டு வரும் மின்னணு சாதன உற்பத்தி மையங்களுக்கும் (Brownfield Electronic manufacturing Centre) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(iii) **மின்னணு துறையின் துணைத் துறை** : மின்னணு பாகங்கள் மற்றும் குறைக் கடத்திகள், பாதுகாப்பு துறைக்கான மின்னணு சாதனங்கள், வாகன மின்னணுவியல், தொழிற்துறைகள் மின்னணுவியல், உத்திசார் மின்னணுவியல் மற்றும் மின்னணு சில்லுகள் வடிவமைப்பு உள்பட மின்னணு சாதனத் துறையின் துணை துறைகள் அனைத்திலும் அவற்றின் மையத் திறன்களின் மேம்பாட்டை முடுக்கிவிட இக்கொள்கையானது முன் மொழிகிறது.

(iv) **வரிச்சலுகைகள்** : மின்னணு சாதனங்களின் உற்பத்தி துறைக்கு வருமான வரிச்சட்டத்தின் கீழ் முதலீட்டோடு இணைந்த மூலதனத்தின் மீதான வரிக் குறைப்பு (Investment linked deduction) உட்பட பொருத்தமான நேரடி வரிச் சலுகைகளை வழங்க இக்கொள்கை முன்மொழிகின்றது.

(v) **ஆதரவு** : மின்னணு அமைப்புகளின் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி தொழிற்துறையில் உள்ள திறனுடைய பணியாளர்களுக்கு ஆதரவு வழங்குதல், ஏற்றுமதி மூலமான வளர்ச்சி, கொள்கை ஆதரவு, உயர் மூலதன தேவையுடைய திட்டங்களுக்கான சிறப்பு ஊக்கத் தொகுப்பு.

(vi) **ஸ்டார்ட் அப் சூழலமைவு** : பாதுகாப்பு, வேளாண்மை, சுகாதாரம், பொலிவுறு நகரங்கள், தானியங்கிகள் போன்றவற்றில் 5G, இணையப் பொருட்கள், செயற்கை நுண்ணறிவு, இயந்திர வழியிலான கற்றல், அவற்றின் பயன்பாடு போன்ற வளரும் தொழில்நுட்பங்களில் ஸ்டார்ட்அப் சூழலமைவை ஊக்குவிக்க இக்கொள்கையானது நோக்கம் கொண்டுள்ளது.

(vii) **மாற்றியமைக்கப்பட்ட சிறப்பு ஊக்கத் தொகுப்பு திட்டம் (Modified Special Incentive package Scheme)** : மின்னணு சாதனங்கள் உற்பத்தி துறையில்

ஏற்கனவே உள்ள உற்பத்தி அமைப்புகளை விரிவாக்குவதற்கும் புதிய உற்பத்தி அமைப்புகளை ஊக்குவிப்பதற்காகவும் வட்டி மானியம், கடன் செலுத்துதல் உத்திரவாதம் போன்ற எளிமையாக அமல்படுத்தவல்ல திட்டங்களைக் கொண்டு ஏற்கனவே உள்ள இந்த மாற்றியமைக்கப்பட்ட சிறப்பு ஊக்கத் தொகுப்பு திட்டத்தை பதிலிட மாற்றம் செய்ய (Replace) இக்கொள்கையானது முன் மொழிகிறது.

(viii) **சுற்றுச்சூழல்** : சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் மின் கழிவுகளை பாதுகாப்பாக வெளியேற்றுதல், மின் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் தொழிற்சாலைகளின் மேம்பாடு, மின் கழிவுகள் மேலாண்மையில் சிறந்த நடைமுறைகளை ஏற்றுக் கொண்டு அவற்றை செயல்படுத்துவதன் மூலம் நீடித்த மின்-கழிவுகள் மேலாண்மை, பசுமை வழி செயல்முறைகளுக்காக தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளித்தல், பசுமை தொழில்நுட்பங்களில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை மேம்படுத்துதல் போன்றவை இக்கொள்கையின் நோக்கங்களாகும்.

(ix) **உலக முதன்மை** : மின்னணு சாதனங்களின் உற்பத்தியில் உயர் மதிப்பு கூட்டுதலை (Higher Value addition) படிப்படியாக ஊக்குவிப்பதன் மூலம் மின்னணு சாதனங்களின் உற்பத்தி சேவைகளில் (Electronic manufacturing Services – EMS) உலகளாவிய அளவில் முன்னணி நாடாக (Global Leader) உருவாக இக்கொள்கை கவனம் செலுத்துகின்றது.

(x) **ஆளுகைக் கட்டமைப்பு** : தொழில்நுட்பம் மற்றும் வணிக மாதிரிகளில் ஏற்பட்டு வரும் வேகமான மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, மின்னணு அமைப்புகளின் வடிவமைப்பு மற்றும் உற்பத்தித் துறையின் குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்ய அரசமைப்பினுள்ளே ஓர் சிறப்பு நிர்வாக ஆளுகை கட்டமைப்பை உருவாக்க இக்கொள்கையானது முன் மொழிகிறது.

**3) தமிழ்நாடு வனக் கொள்கை 2018-ஐ பற்றி விரிவாக எழுதுக.**

**நோக்கம்** :

i) தற்போது மாநிலத்தின் மொத்த புவிப் பரப்பில் 21.76% என்னும் அளவிற்கு உள்ள வன மற்றும் மரங்களின் பரப்பை (Forest and tree cover) 33 விழுக்காட்டு அளவிற்கு அதிகரித்தல்.

**உயிரி - பல்வகைத் தன்மை மற்றும் மரபியல் மூல ஆதார பாதுகாப்பு**

(i) வன உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் வளரும் இருப்புகள்

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

a. பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த மர வளங்களை (Tree Resoures) அடையாளம் காணுதல் மேலும் அவற்றின் இருப்புகளை மேம்படுத்துதல்.
b. சிறந்த நடவு இருப்புகளின் தகவமைப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட மரவளர்ப்பு (Silviculture) மேலாண்மை நடைமுறைகளை தகவமைத்தல்.
c. அரிய, அருகி வரும் மற்றும் அச்சுறுத்தலுக்குள்ளான இனங்களின் பாதுகாப்பு.
d. மேம்பட்ட சுற்றுச்சூழல் சூழலமைவுச் சேவைகளுக்காக வனங்களின் தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் அதனை மீட்டெடுத்தல்.

**(ii) வன உயிர் மற்றும் உயிரி பல்வகைத் தன்மையின் பாதுகாப்பு**

a. பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் மேலாண்மை மற்றும் வனஉயிர் மற்றும் வன வளங்களின் மேம்பாடு ஆகியவற்றில் தமிழ்நாடானது ஓர் முன்னோடி மாநிலமாகும்.
b. தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்டப் பகுதிகளினுடைய மேலாண்மையின் (Protected Area Management) கீழ் உள்ள மொத்த பரப்பு 7,072.95 சதுர கிலோ மீட்டராகும். இது மாநிலத்தின் மொத்த வனப்பரப்பில் 30.92% ஆகும்.
c. மாநிலத்தில் உள்ள பாதுகாக்கப்பட்ட பகுதிகளாவன.
    - 5 தேசியப் பூங்காக்கள்
    - 15 வன விலங்கு சரணாலயங்கள்
    - 15 பறவை சரணாலயங்கள்
    - 2 பாதுகாக்கப்பட்ட காப்பியங்கள்
    - 4 புலிக் காப்பகங்கள்
d. வனஉயிர் (பாதுகாப்பு சட்டம்), 1972-ன் கீழ் இந்த பாதுகாக்கப்பட்ட பகுதிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

**(iii) மனித-வன உயிர் மோதல்களை களைதல் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள்**

a. பாதிக்கப்படக்கூடிய பகுதிகளைக் கண்காணித்தல் மற்றும் வன உயிர்களின் வசிப்பிடங்களை கண்காணித்தல்.
b. மனித-வன உயிர் மோதல்களை தடுக்க வன உயிர்களின் வசிப்பிடங்களின் கண்காணிப்பிற்காக GIS வசதி பொருத்தப்பட்ட தகவல் மற்றும் தொழில்நுட்ப வழி நடத்து அமைப்புகள்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

c. நவீன சாதனங்கள் மற்றும் தொழில்நுட்பங்களின் மூலம் உள்ளூர் மக்கள் மற்றும் வனப்பகுதிகளில் வசிப்போருக்கு மனித-வன உயிர் மோதலை தடுப்பது தொடர்பாக அறிவுறுத்தல்.

d. மக்களின் நம்பிக்கையை பெற அரசு தரும் சலுகைகளைச் சரியான நேரத்தில் அவர்களுக்கு விநியோகித்தல்.

e. வனப்பகுதிகளிலிருந்து விலகி வெளியிடங்களில் உலவும் வன உயிர்களின் மீட்பு மற்றும் மறு வாழ்விற்கான நெறிமுறைகள்

f. நகரும் கால்நடை மருத்துவ அமைப்புகள் மற்றும் விரைவான மருத்துவ சேவை குழுக்கள் (Rapid Response Team) ஆகியவற்றின் மூலம் வன உயிர்களுக்கான கால் நடைமருத்துவ சேவைகளை (Verteinary Service) வலுப்படுத்துதல்.

**(iv) வெளியிட சூழல் பாதுகாப்பினை (Ex-Situ Conservation) வலுப்படுத்துதல்**

a. கல்வி மற்றும் மக்களைச் சென்றடைதல் ஆகியவற்றின் மூலம் பாதுகாப்பு ஆதரவிற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

b. வனஉயிர்களின் ஆரோக்கியம் மற்றும் அவற்றின் பேணுதலுக்காக கால்நடை மருத்துவத் தீர்வை வழங்க கால்நடை மருத்துவ துறையில் புதிய மருத்துவ ஆராய்ச்சிகளை அதிகரித்தல்.

c. சிறந்த நடைமுறைகளின் பரிமாற்றத்திற்காக மாநிலத்தில் அனைத்து உயிரியல் (Zoological Park) மற்றும் வண்ணத்துப் பூச்சி பூங்காக்கள் (Butterfly Park) அடங்கிய ஓர் பிணையத்தை (Network) உண்டாக்குதல்.

d. செயற்கை வழியிலான பராமரிப்பில் (Captivity) உள்ள வன விலங்குகளின் தத்தெடுப்பிற்காக பொது மக்களின் ஆதரவை நாடுதல்.

e. செயற்கை வழியிலான பராமரிப்பு (Captivity) மற்றும் மீட்பு மையங்களில் உள்ள (Rescue Centres) அனைத்து விலங்குகளுக்கும் உயர்தரமுடைய கால்நடை மருத்துவ சிகிச்சை சேவைகளை வழங்குதல்.

**(v) மன்னார் வளைகுடாவில் கடல்சார் உயிரி-பல்வகைத் தன்மையினை பாதுகாத்தல்.**

a. கடல்சார் மூல ஆதாரங்களின் சமமான பகிர்வு மற்றும் நீடித்த பயன்பாட்டினை மேம்படுத்துவதன் மூலம் கடல் சார் பல்வகைத் தன்மையினை பாதுகாத்தல்.

b. உள்ளூர் சமுதாயத்தின் உதவியோடு கடல் வாழிடங்களின் தரத்தை மேம்படுத்துதல்.

**(vi) தீங்கு விளைவிக்கும் ஊடுருவல் இனங்களின் (Invasive Species) வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல் மற்றும் வனங்களின் மீதான அவற்றின் பாதகமான தாக்கத்தைக் கட்டுபடுத்துதல்.**

a. குறிப்பிட்டப் பகுதிகளில் உள்ள ஊடுருவியுள்ளது தீங்கிழைக்கும் இனங்களின் ஒருங்கிணைக்கம் அகற்றல் திட்டங்களை மேற்கொள்ளுதல்.
b. தீங்கிழைக்கும் ஊடுருவல் இனங்களினை கட்டுப்படுத்துதல் மற்றும் அவற்றை நீக்குதல். களைகளின் ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீட்டெடுத்து அவற்றை, அண்மை இயற்கை வன அந்தஸ்து நிலைக்கு (Near Natural Forests Status) கொண்டு வருதல்.

**(vii) பழங்குடியின மக்களின் நல்வாழ்வு மேம்பாடு**

a. திறன் மேம்பாடு மூலம் வருமானத்திற்கு தேவையான மாற்று மூலங்களை ஏற்படுத்துதல்.
b. வன மூல ஆதாரங்களுக்கான அணுகல் மற்றும் அவற்றிலிருந்து கிடைப்பவற்றின் சமமான பகிர்வு ஆகியவற்றிற்காக பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்திற்கான திறன்களைக் கட்டமைத்தல்.
c. பழங்குடியின மக்களுக்கு அதிகபட்ச கல்வியியல் மற்றும் தொழில் சார்ந்த வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
d. பெண்கள் உட்பட பழங்குடியின மக்களுக்கு அதிகாரமளித்தல். அதன் மூலம் அவர்கள் சுய-சார்பு உடையவர்களாக உருவெடுப்பர்.

**(viii) ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கம்**

a. புதிய வன மேலாண்மை நடைமுறைகளை ஆதரிப்பதற்காக தேவை அடிப்படையிலான ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல்.
b. காடுகள் வளர்ப்பு திட்டங்களுக்காக உயிரி - உரங்கள், உயிர் - ஊட்டச்சத்து ஊக்கிகள், விதைகள், சான்றளிக்கப்பட்ட தரமான நடவும் பொருட்கள் போன்றவற்றை வழங்குதல்.
c. அரிய, அருகி வரும், மற்றும் ஓரிட வாழ் இனங்களின் பாதுகாப்பு, மீட்பு மற்றும் மீட்டெடுப்புத் திட்டங்களின் மீது முக்கியத்துவம் செலுத்துதல்.
d. வனக் கல்லூரிகள் மற்றும் அகாடமிகள் மூலம் நவீன தொழில் நுட்பங்களின் மீது கள அளவிலான பணியாளர்களுக்கு தொழில்முறை திறன்களை வழங்குதல்.
e. விரிவாக்கத் திட்டங்கள் மூலம் சிறந்த நடவடிக்கைகளைக் காட்சிப்படுத்துதல் மற்றும் அவற்றை ஆவணப்படுத்துதல்.
f. வனம் மற்றும் வன உயிர் பாதுகாப்பிற்கான விளக்கேந்திகளாக (torch bearers) குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள் உருவாக அவர்களுக்கு பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஊட்டுதல்.

**(ix) மையப் படுத்துதல், மின் - ஆளுகை திட்டம்**

a. திறனுடைய வன மூல ஆதார மேலாண்மைக்காக நிகழ் நேர அடிப்படையிலான தகவல்கள் (Real Time based Information)
b. வன நிர்வாகத்தை மேம்படுத்துதல், MIS மற்றும் GIS முன்னெடுப்புகளின் மூலம் நிர்வாக ஆளுகையை துரிதப்படுத்துதல்.

**(x) வன மேலாண்மைக்கு ஆதரவளிக்க திட்டமிடல் செயல்முறை.**

a. 2014-ஆம் ஆண்டின் தேசிய வேலைத் திட்டத் தொகுப்பினுடைய (National Working Plan Code – 2014) கூறுகளைத் தகவமைப்பதன் மூலம் வேலை திட்டங்களை தயார் செய்தல்.
b. வன உயிர்கள் மற்றும் பாதுகாக்கப்பட்டப் பகுதிகளில் ஆராய்ச்சி அடிப்படையிலான மேலாண்மை திட்டங்கள்.

**(xi) மனித வள மேம்பாடு**

a. வனத்துறை நிர்வாகத்தில் உள்ள காலியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கான திட்டங்களை உருவாக்குதல். திட்டமிட்ட முறையில் பணியிட மாற்றம் மூலம் பணியாளர்களை நியமித்தல் மற்றும் அவர்களின் பதவி உயர்வு போன்றவற்றிற்கு திட்டங்களை உருவாக்குதல்.
b. போதுமான அளவில் வனத்துறையில் களப் பணியாளர்களின் எண்ணிக்கையை பராமரிக்க பதவி உயர்வு திட்டங்களை ஏற்படுத்துதல்.
c. அதிகரிக்கப்பட்ட வெளியீடு மற்றும் செயல் திறனுடைமைக்கு பல்வேறு வனப்பணி கேடர்களின் மறுசீரமைப்பு.
d. மேலாண்மை, நிர்வகிப்பு மற்றும் ஆளுகைத் திறன்களின் மேம்பாட்டினை பெற கள மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல், திறன்களை கட்டமைத்தல், திறன்களை மேம்படுத்துதல் ஆகியவை ஆகும்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS